முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 131/2018

வாதி தரப்பு சாட்சி -1 தங்கவேல் திரு.ஆர்.ஞானசேகர் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.08.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கவேல் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | குட்டியப்பன் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 65 |

**4,11,12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. பட்டாயி என்பவரின் தாயார் பெயர் கருப்பாயி சரியல்ல. அவர் பெயர் தெரியவில்லை. பட்டாயிக்கு ஆண்டியப்பன் என்ன உறவு என்றால் பெரியப்பா. பட்டாயின் தந்தை பெயர் தெரியாது. தாவா சொத்தை நான் அனுபவம் செய்ததற்கு ஏதேனும் ஆவணங்கள் இருக்கிறதா என்றால் பத்திரம் உள்ளது. தீர்வை இரசீதுகள் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி தீர்வை இரசீதை பார்த்தால் அதில் உள்ள பட்டா எண் தெரியும் என்றால் சரிதான். வள்ளியம்மை பெயருக்கோ, முருகாயி பெயருக்கோ வாய்தா இரசீது வைத்துள்ளேனா என்றால் அவர்கள் பெயரில் இல்லை. மேற்படி வாய்தா இரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். தற்போது கையில் உள்ளதா என்றால் வைத்துள்ளேன்.

2. வா.சா.ஆ.2 ல் சர்வே எண்.212/10 சொத்தை பொறுத்து வள்ளியம்மை, கருப்பாயி பெயரில் உள்ளது என்றால் சரிதான். கருப்பாயிடமிருந்தோ, கருப்பாயின் வாரிசுகளிடமிருந்தோ ஏதேனும் ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. அவர் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். கருப்பாயி இறந்ததற்கு இறப்பு சான்றிதழ் உள்ளதா என்றால் இல்லை. கருப்பாயி இறப்பதற்கு முன்பு சர்வே எண்.212/10 யை வள்ளியம்மையுடன் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். சர்வே எண்.212/10 ன் மொத்த விஸ்தீரனம் ஏக்கர் 1.12 ஆகும். சர்வே எண்.212/10G கருப்பாயி பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை.

3. சர்வே எண்.212/12A கருப்பாயி பெயரில் பட்டா உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.212/10 ல் ஏற்பட்ட உட்பிரிவுகளில் சில வள்ளியம்மை பெயரில் இருந்ததா என்றால் இல்லை. எனது பாட்டி கிரையம் பெற்ற பின்னிட்டு தான் உட்பிரிவு

ஆனது. எனது பாட்டி கிரையம் பெற்றது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. சர்வே எண்.212/11 பொறுத்து எனக்கு எந்த உரிமையோ, அனுபவமோ இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து என் பெயரிலோ, எனது தகப்பனார் பெயரிலோ, முருகாயி பெயரிலோ பட்டா இருந்ததா என்றால் எனது தகப்பனார் பெயரில் மட்டும் இருந்தது. என் பெயரிலும் முருகாயி பெயரிலும் இல்லை. எனது தகப்பனார் பெயரில் இருந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. தாவா சொத்துக்களில் எனக்கு எந்தவிதமான உரிமையோ, அனுபவமோ எந்த காலத்திலும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் வள்ளியம்மை எழுதி கொடுத்தது அல்ல என்றும், அது ஏற்க்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வள்ளியம்மைக்கு தாவா சொத்து எந்த காலத்திலும் உரிமையோ அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டவை அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் பொறுத்து உட்பிரிவு ஏற்பட்ட விவரம் எனக்கு அப்போதே தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.10 ஆவணத்தில் உள்ள முத்து சாமி 3 ம் பிரதிவாதி என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ல் கண்ட முத்துசாமி, ஐயப்பன் 4, 5 ம் பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.12 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் நாங்கள் அனுபவம் செய்வதை பிரதிவாதிகள் இடையூறு செய்வதால் வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்தில் எனக்கு எந்த அனுபவம் உரிமையும் இல்லை என்றும், நான் வைத்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்தால் எனக்கு எதிராக அமையும் என்பதால் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**7 முதல் 10 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**